**எதிர்கால இராஜ்ஜியங்களின் நிலை**

**வாசிக்க**: **தானியேல்** 11:1-4

தானியேல் 2 ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சாருக்கு கனவின் மூலம் எதிர்காலத்தில் சம்பவிக்கப்போவனவற்றை கர்த்தர் காண்பித்திருந்தார். தானியேல் 11ம் அதிகாரத்தில் பாபிலோனின் வீழ்ச்சியை விரிவாகவும் அதன் பின் நடக்கப்போகும் சம்பவங்களை குறித்து கூறுகின்றார். வரலாற்றை நாம் கற்றுக் கொள்வது சிறந்தது பிள்ளைகளே அதுவே நமக்கு பாடமாகவும் வழிகாட்டியுமாய் உள்ளது. அது தவிர தேவன் ஒருவர் உண்டு, அவர் ஜீவிக்கிறார், அவரே கர்த்தர் என்பதை நிரூபிக்க வரலாறு அல்லது சரித்திரம் சான்றாக உள்ளது. இன்று நாங்கள் படிக்கும் பாடத்தில் கர்த்தர் தானியேலுக்கு சொன்ன காரியம் அனைத்தும் நிறைவேறியுள்ளது பிள்ளைகளே. மேதியனாகிய தரியூவுக்கு பின் மூன்று ராஜாக்கள் பெர்சியாவில் எழும்புவார்கள். அதன் பின் வரும் நான்காவது ராஜா ஐசுவரியத்தில் பலம்கொண்டு, கிரேக்க ராஜ்ஜியத்துக்கு விரோதமாய் சகலரையும் எழுப்பிவிடுவான். அதற்கு பின் பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு, தனக்கு இஷ்டமானதை செய்வான். பின் அவனுடைய ராஜ்ஜியங்களும் நான்காக பிரிக்கப்படும்.

**கேள்வி**:

மேற் சொல்லப்பட்ட ராஜாக்கள் யார்? சம்பவங்களை விளக்குக.

**பதில்**:

கி.மு 605 முதல் கி.மு 535 வரை வாழ்ந்த தானியேல் இப்பொழுது பாபிலோனில் தற்போதைய ஈராக்கில் இருக்கிறார். தானியேல் வாலிப வயதில் 14 க்கும் 16 வயதுக்கிடையில் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டு செல்லப்பட்டார். பாபிலோன் இப்பொழுது பெர்சியர்களால் ஆளப்படுகிறது. பண்டைய காலத்தில் பாரசீகம் என அழைக்கப்பட்ட நாடே பெர்சியாவாகும் இன்று இது ஈரான் என அழைக்கப்படுகிறது. பெர்சிய சாம்ராஜ்ஜியம் கி.மு 550-330 வரை நிலைநின்றது. இந்த நாட்களிலே தான் தானியேலுக்கு சொல்லப்பட்ட நான்கு ராஜாக்கள் அரசாண்டார்கள். 1. கோரேஸ் 2. காம்பிசஸ் 3. முதலாம் தரியு

4. செர்செஸ் ஆகும். இந்த செர்செஸ் தான் கிரேக்க ராஜ்ஜியத்துக்கு எதிராக பல ராஜாக்களை எழுப்பிவிட்டவர். செர்செஸுக்கு பின் ஆறு ராஜாக்கள் இருந்ததாகவும்.

மூன்றாம் தரியு அரசாண்ட காலத்தில். கிரேக்க ராஜாவான மகா அலெக்சாண்டர் பெர்சிய ராஜ்ஜியத்தை வீழ்த்தி பாபிலோனையும் கைப்பற்றினார். இவரே பராக்கிரமமுள்ள ராஜாவாகும். தானியேலுக்கு முன்னறிவிக்கப்பட்டவை படிப்படியாய் நிறைவேறி கிட்ட தட்ட 200 (கி.மு 330) வருடங்களின் பின் பெர்சிய சாம்ராஜ்ஜியமும் வீழ்ச்சியடைந்தது. அலெக்சாண்டர் மரித்த பின் அவருடைய ராஜ்ஜியம் நான்காக பிரிக்கப்பட்டது. கர்த்தர் சொன்னது ஒருபோதும் தடைபடாது. ஆமென்

தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை. சங்கீதம் 14:1

**ஜெபம்**

வாக்குரைத்த தேவன் வாக்குமாறதவர். ஜீவனுள்ள தேவனின் ஜீவ வார்த்தைகள் இன்றும் எங்களோடு பேசிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து வேதத்தின் மகத்துவங்களை சொல்லித்தாங்கப்பா. ஆமென்

**அப்போஸ்தலனாகிய நாத்தான்வேல்**

**வாசிக்க**: 2**கொரிந்தியர்** 2:1-17

யோவான் சுவிசேஷ புத்தகத்தில் மட்டும் நாத்தான்வேல் என்கிற பெயர் பயன்படுத்தப்படுகிறது. யோவான் 1:45. நாத்தான்வேல் என்றால் தேவனின் ஈவு என்று அர்த்தமாகும். மற்ற மூன்று சுவிசேஷ புத்தகங்களில் பர்தொலேமேயு என்கிற பெயர் பயன்படுத்துகிறது. மத்தேயு 10:3, மாற்கு 3:18, லூக்கா 6:14, பர்தொலேமேயு என்றால் தல்மேயுவின் மகன் என்று அர்த்தமாகும். சீமோன் எங்கிற பேதுரு, லேவி என்கிற மத்தேயு, லெபேயு என்கிற ததேயு, யோவான் என்கிற மாற்கு என்பதுப் போல பர்தொலேமேயு என்கிற நாத்தான்வேல் ஆகும். பிலிப்புவும் நாத்தான்வேலும் அண்ணன் தம்பிகள் என்று நம்பப்படுகிறது.

நாத்தான்வேல் கபடற்றவன் (எந்த தவறும் செய்யாதவன்), உத்தம இஸ்ரவேலன், தேவனின் மக்களில் நாத்தான்வேல் சொன்னது நீர் தேவனுடைய குமாரன், இஸ்ரவேலின் இராஜா என்று சீடர்களில் முதல் முதலில் இயேசுதான் மேசியா (கிறிஸ்து) என்று சாட்சி கொடுத்தவர் இவர்தான். யோவான் 1:49. இயேசு நாத்தான்வேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் இதிலும் பெரிதானவைகளை காண்பாய், தரிசனங்களை காண்பாய் என்று வாக்குப்பண்ணினார். யோவான் 1:50,51.

நாத்தான்வேல் இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஊழியம் செய்தார். சின்ன ஆசியாவில் எராப்போலி என்ற இடத்தில் பிலிப்புவுடன் இணைந்து ஊழியம் செய்தார். இவர் ஒவ்வொரு நாளும் 7 முறை ஜெபிக்கும் பழக்கமுடையவர். 26 வருடங்கள் இவர் போட்டிருந்த ஆடை மற்றும் காலனியை மாற்றவில்லை. ஒரே

உடையை உடுத்திக்கொண்டிருந்தார். அது கிழியவோ, பழையதாக மாறவில்லை. மேலும் உணவை உண்ணாமலும், தண்ணீரை குடிக்காமல் உபவாசமிருந்து ஊழியம் செய்தார்.

கி.பி 60ல் அர்மீனியாவில் உழியம் செய்தார். அங்கு இருந்த பாலிமியாஸ் அரசனும், அவன் குடும்பத்தினரும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். இது அங்கு இருந்த பூசாரிகளுக்கு பிடிக்கவில்லை. அவர்கள் பாலிமியாஸின் சகோதரனை தூண்டிவிட்டு நாத்தான்வேலை பிடித்து உயிருடன் இருக்கும்போதே அவன் தோலை உரித்து சிலுவையில் தலைகீழாக அறைந்து கொலை செய்தார்கள். இப்படியாக நாத்தான்வேல் இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார்.

**கேள்விகள்**:

1. நாத்தான்வேல் என்றால் என்ன?

2. சீடர்களில் முதல் முதலில் இயேசுதான் மேசியா என்று சாட்சி கொடுத்தவர் யார்?

3. நாத்தான்வேல் இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தது எப்படி?